தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 78/ந/2024

நாள். 15.05.2025

| | | |
|---|---|---|
| திரு.சு.சேக் பரீத்,<br>பள்ளபட்டி | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>பள்ளபட்டி நகராட்சி, பள்ளபட்டி | – | எதிர்மனுதாரர் |

கரூர் மாவட்டம், பள்ளபட்டி, வார்டு எண்.11, பட்டானித்தெரு, கதவு எண்.128 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு.சேக்பரீத் என்பவரின் 29.07.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2024 அன்று பெறப்பட்டு, 78/ந/2024 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கரூர் மாவட்டம், பள்ளபட்டி, வார்டு எண்.11, பட்டானித்தெரு, கதவு எண்.128 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு.சேக்பரீத் என்பவர் தமது 29.07.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

கரூர் மாவட்டம், பள்ளபட்டி நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியானது 27 மாமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கியது. இதில்ஆண்கள் 13 பேர், பெண்கள் 14 பேர் மாமன்ற உறுப்பினராக மக்களின் பிரதிநிதியாக தங்கள் பகுதி மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 20–வது வார்டு பெண் கவுன்சிலர் திருமதி.முனவர்ஜான் நகராட்சி தலைவர் பொறுப்பில் உள்ளார். சில மாதங்கள் அவர் நடுநிலையாக செயல்படுவது போல் தோற்றம் அளித்தாலும், இவரின் மகன் அதிகாரமில்லாத ஆதிக்கத்தில்தான் நகராட்சி நிர்வாகம் செயல்படுகிறது. இதனால் முறைகேடுகள், இலஞ்சம், ஊழல்கள், பாரபட்சம் காட்டல், அதிகார துஷ்பிரயோகம் செய்தல், இலஞ்ச ஊழல்களை இவர்கள் செய்வதோடு நகராட்சி நிர்வாக

அலுவலர்கள் செய்வதை ஊக்குவித்தல், இதற்கான ஆதாரம் நகராட்சி தலைவியும் நானும் நியாயம் கேட்டு பேசிய ஆடியோவில் முழு ஆதாரம் உள்ளது. யார் யார் பெற்றார்கள். இவர்கள் மக்களிடம் முறைகேடாக வாங்கிய இலஞ்ச ஊழல் பணம் பல்லாயிரக்கணக்கில் நகராட்சியில் பொதுமக்கள் தங்களுடைய அடிப்படை பணிகளை நேர்மையாக செய்யப்படமுடியவில்லை. மேலும் தேவைகளை பூர்த்தி செய்ய இலஞ்சம் கொடுக்க வேண்டிய கட்டாய அவலநிலைக்கு தள்ளப்படுகின்றனர். இல்லையென்றால் அவர்களுடைய அடிப்படை தேவைக்கான பணி வருடக்கணக்கில் ஆனாலும் செய்யப்படாமல் அலைகழிப்பு செய்யப்படும். வேலியே பயிரை மேய்வது போல ஊர்மக்களிடம் ஜனநாயக கடமையான ஓட்டு வங்கியை பெற்று சத்திய பிரமாணம் செய்து பொறுப்பிற்கு வந்தவுடன் பொதுமக்களுக்கான அனைத்து அடிப்படை வசதிகள் தேவைகள் பணிகளை நிறைவேற்ற வேண்டும். மாறாக பொதுமக்களிடம் இலஞ்சம் வாங்க தூண்டுதல் செய்யும் நகராட்சி மன்ற தலைவி உரையாடலில் அலுவலர்கள் ஆயிரம், ஐநூறு என வாங்குவது உண்மைதான் என்ன செய்வது இந்த இலஞ்சப்பணம் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. குறிப்பாக ஆணையர், நகராட்சி மண்டல இயக்குநர், அவர்களுக்கு மாதம் ரூ.20,000/– கொடுக்க வேண்டும் என்பதும் நீங்கள் நகராட்சி நிர்வாகத்தை பற்றி குறை கூறினால் எதுவும் கண்டுக்கமாட்டார்கள் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என தகுதியில்லா நகராட்சி தலைவர் பேசியுள்ளார்.

நகராட்சி ஆணையர், நகராட்சி தலைவர், நகராட்சி செயற்பொறியாளர், இன்னும் சில அலுவலர்கள் கூட்டமைத்து, வரி சீராய்வு என்ற பெயரில் சொத்துவரி உயர்வில் கொசுமருந்து தெளிப்பவர்கள் தினக்கூலி துப்புரவு செய்பவர்கள் மூலம் சட்டவிரோதமாக தவறான அளவீடு செய்யப்பட்டு குளறுபடி நடந்தது. மேலும் சொத்துவரி சுய மதிப்பீடு படிவம் நகராட்சி அலுவலகத்திற்கு வந்தும்,அதனை வீட்டு உரிமையாளரின் அனுமதி பெற்று அளவிடப்படவில்லை. திருமண மண்டபங்கள், செல்வந்தர்கள், தொழிற்கூடங்கள், VIP தெரிந்தவர்கள் வீடுகளில் தவறான அளவீடு செய்து அரசுக்கு நிதி இழப்பீடு செய்துள்ளனர்அனைவரும் கூட்டணி சேர்ந்து.

நகராட்சி தரம் உயர்த்த விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டு மனைநிலங்களாக ஆக்கப்பட்டது. 25 ஆண்டுகளில் பல நூறு ஏக்கரில் பள்ளபட்டி பகுதிகளில் மனைப்பிரிவுகள் பிரிக்கப்பட்டது. இதில் அரசாங்கத்திற்கு 10% சதவீதம் இடம் கொடுக்க வேண்டும். இதனையும் இந்த கூட்டணி சரியாக பராமரிப்பு பாதுகாக்காமல்,தாரை வார்த்து கொடுத்துள்ளதா ? இல்லை ஆக்கிரமிப்பை செய்துள்ளதா என்று தெரியவில்லை. நீதி விசாரணை செய்து அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்தை மீட்கவும், குளம், நீர் ஓடைகள், பல்வேறு வாழ்வாதார கிணறுகள், என வாழ்வாதார நீர்வள ஆதாரத்தை பாதுகாக்காது அழித்து சுய இலாபம் செய்பவர்களிடம் உறுதுணையாக கைகோர்த்துள்ளது நகராட்சி நிர்வாகம்.

பல்வேறு சாலை, தெருக்கள், அரசுக்கு சொந்தமான இடங்களை சிலர் ஆக்கிரமிப்பு செய்வதை நகராட்சி ஊக்குவித்து பல்லாயிரக்கணக்கில் முறைகேடாக வசூல் செய்கிறது. இதனால் பல்வேறு இடையூறுகள் போக்குவரத்து நெரிசல் பொது பணி செய்ய இடமில்லாமல் தவிக்கும் அவலநிலை உள்ளது. பிளான் அப்ரூவல், அடிப்படை வசதிகள், பணிகளில் தரமற்ற சாலை, வடிகால் சாக்கடை அமைத்தல், ஆக்கிரமிப்பு ஊக்குவித்தல், பொதுநிதியை முறைகேடாக சுரண்டல், பொய்கணக்கு பில் செய்தல் (செய்யப்படாத பணிகளுக்கும் கொள்முதல் பொருள்களுக்கும்) கொள்முதல் முறைகேடு, மின்விளக்கு முறைகேடு, பிளீச்சிங்,

சுகாதார பொருட்கள் கொள்முதல் முறைகேடு, நகராட்சி துப்புரவுக்கு பயன்படுத்தும், நான்கு சக்கர வாகனங்கள், ஏனைய வண்டிகளில் முறைகேடு, அதிகார துஷ்பிரயோகம், சேர்மன் மகன் மூலம் பல இடைத்தரகர்கள் உருவாக்கி இலட்சம் பெற்று கொண்டு பணி செய்தது. பொதுமக்களை அலட்சியம் செய்வது, தரமற்ற ஒப்பந்ததாரர்களுக்கு அடிப்படை வசதிகளுக்கு ஒப்பந்தம் செய்வது. அடிப்படை வசதிகளான சாலை, சாக்கடை வடிகால் பணி செய்யப்படும்பொழுது, ஒப்பந்ததாரர் பெயர், விலாசம், ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீடு போன்றவை மக்கள் பார்வைக்கு வைப்பதில்லை.

மேலும், பொதுமக்களின் வரிப்பணத்தை சுரண்டும் முறைகேடு செய்யும் தீர்மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து பெரும்பாண்மையான மாமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்தும் 27.06.2024 கோரம் இல்லாமல் மாமன்ற கூட்டத்தை நடத்தி 27 பேருக்கு 8பேர் கலந்து கொண்ட கோரம் இல்லா கூட்டத்தில் மாமன்ற தலைவரோடு, நகராட்சி ஆணையர், அலுவலர்கள் உதவியோடு சட்ட விரோதமாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதை ரத்துச்செய்யக் கோரியும் இவர்கள் அனைவர்களது மீதும் துறைரீதியாக நடவடிக்கை எடுக்கவும் ஊர் பொதுமக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளபட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் அனைவரும் பல்வேறு வரியினங்களை நகராட்சிக்கு செலுத்தி வருகின்றனர். இங்குள்ள மக்கள் தங்களது ஜனநாயக கடமையாற்ற தங்களுக்கான தங்களின் பகுதிகளுக்கான அடிப்படை வசதிகள் தேவைகள் அனைத்தையும் பெற்றுத்தர ஒரு பிரதிநிதியை ஒவ்வொரு பகுதிக்கும் 27 வார்டுகளுக்கும் தேர்ந்தெடுக்கின்றனர். மேலும் நகராட்சி மாமன்ற தலைவி முறைகேடுகள் செய்வதற்கு மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் நகராட்சி ஆணையர், அலுவலர்கள் தன்னிச்சையாக தனி நபர்களுக்காக இலஞ்சம், ஊழல் தரமற்ற பணிகள், கொள்முதல் என அனைத்திலும் ஒத்துழைக்கின்றனர். பகுதி உறுப்பினரான சில பகுதி மாமன்ற உறுப்பினர்களின் உரிமைகள், அதிகாரங்கள் பறிக்கப்படுகிறது.

கேள்வி கேட்டால் தரமான பணிகள் அடிப்படை வசதி கேட்டால், அதை புறக்கனிப்பதும் அதற்கான புகாரை உயர்அதிகாரியான நகராட்சி மண்டல இயக்குநருக்கு கொடுத்தால் அவரும் லஞ்சம் பெற்றுக்கொண்டு கண்டும் காணாமல் இருப்பதும், மிகவும் மனவருத்தம் அளிக்கிறது. தேவைகள் அடிப்படை வசதிகள் கேட்டு புகார்தெரிவித்தால் அந்த பகுதி புறக்கணிக்கப்படுகிறது.

மேலும் நகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பகுதி மக்களின் பிரதிநிதிகளாகவும், நகராட்சி மாமன்றத்தின் அங்கத்தினராகவும் உள்ளனர். பொய்யான முறையில் கடந்த 27.06.2024 அன்று மாமன்ற கூட்டத்தில் கோரம் இல்லா கூட்டத்தில் 8 பேர் கையெழுத்திட்ட நிலையில் முறைகேடாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அனைவரின் ஒத்துழைப்பால் இதனை விளக்கம் கேட்க 19 மாமன்ற உறுப்பினர்கள் தீர்மான ஏடு (Minute Book) வேண்டி கேட்டபோது அதனை காண்பிக்க இயலாது, என்ன செய்யமுடியுமோ செய்யுங்கள் என்று நகராட்சி மாமன்ற தலைவி மற்றும் ஆணையர் கூறிவிட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு மதிப்பளிக்காது வெளியே சென்று விட்டனர்.

2 ஆண்டுகாலம் ஆகியும் இன்னும் பல ஆதாரமான செய்திகளுக்கும், மாவட்ட ஆட்சியர் குறைதீர் மனுக்களுக்கும் விடை கிடைக்கவில்லை. கோரிக்கையை நிறைவேற்றிதருவதும்

இல்லை. பொதுமக்களின் அடிப்படை தேவைகள், வசதிகள் வேண்டி மனு கொடுக்கச்சென்றால் நகராட்சி அலுவலர்கள் பெறுவதில்லை. ஆணையரிடம் கொடுக்க வலியுறுத்துகின்றனர். ஆனால் ஆணையரோ நகராட்சி அலுவலகத்தில் இருப்பதில்லை. உரிய பதிலும் அலுவலர்கள் சொல்வதில்லை. பெறப்படும் கோரிக்கை மனுக்களுக்கு பெற்றதற்கான ஒப்புகை ரசீது(acknowledgement) தருவதில்லை. மனுக்களும், மக்களின் உரிமைகளும் குப்பையோடு குப்பையாக கிடப்பில் உள்ளது. இதுவரை ஆயிரக்கணக்கான மனுக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

நகராட்சிக்கு சொந்தமான பல ஆயிரக்கணக்கான சதுர அடி நிலங்கள் பாதுகாக்கப்படாத நிலையில் பலபேருக்கு ஆக்கிரமிப்பு மூலம் தனிநபர் ஆதாயம் தேடிக்கொண்ட நகராட்சி நிர்வாகம், வருவாய் வட்டாட்சியர் துறைக்கு உடன்பட்ட 1400 சதுர அடி இடத்திற்கு அலுவலக வேலையாட்கள் மூலம் ஒப்பந்தம் வழங்கி கம்பி வேலி போட்டு மக்களின் வரிப்பணத்தை வீணாக்க காரணம் என்ன ?

இந்திய இறையாண்மைக்கும், இந்திய அரசியல் அமைப்பு சாசண சட்டத்திற்கும் உட்பட்ட குடிமகன்களாகிய ஒவ்வொருவரும், தங்கள் கடமையை இறையச்சத்தோடு, மக்களுக்காவும், வாழ்வாதார உரிமைகள், கடமைகள் வளர்ச்சிகள் பெற பல நல்ல உள்ளங்கள் பாடுபடும் நிலையில், தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி கொண்டிருக்கும் தமிழக முதல்வரின் ஆட்சிக்கும், சம்பந்தப்பட்ட துறைக்கும் தொடர்ந்து களங்கம் விளைவிப்பதற்கு மக்களின் வரிப்பணத்தை சம்பளமாக பெற்று மக்களுக்கு சேவை செய்யும் இடத்தில் உள்ள நகராட்சி மன்ற தலைவி, நகராட்சி ஆணையர், நகராட்சி செயற்பொறியாளர், குற்றஞ்சாட்டப்பட்ட ஏனைய அலுவலக ஊழியர்கள் மீது துறைரீதியாக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தி உரிய தண்டனை பெற்றுத் தருமாறு" உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை ஊர்மக்களின் சார்பாக கேட்டுக்கொண்டுள்ளார்.

**2.** மனுதாரரின் புகார் மனு மீது விரிவான அறிக்கை கோரி இம்முறைமன்ற நடுவ **13.08.2024** நாளிட்ட கடிதம் மூலம் பள்ளபட்டி நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

**3.** பள்ளபட்டி நகராட்சி ஆணையாளர் தனது **23.08.2024** நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

பள்ளபட்டி பேரூராட்சி அரசு ஆணை எண்.**116**, நாள் **07.12.2021**–ன்படி நகராட்சியாக **07.12.2021** முதல் தரம் உயர்த்தப்பட்டு இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகர்மன்றத்தில் **27** நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது வார்டு எண்.**20** நகர்மன்ற உறுப்பினர் திருமதி.முனவர்ஜான் முறைப்படி நகர்மன்ற தலைவராக பொறுப்பில் இருந்து வருகிறார். பள்ளபட்டி நகராட்சி பற்றி மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட புகார்கள் அனைத்தும் ஒரு பணியினை பற்றியோ அல்லது குறிப்பிட்ட காலத்தினை பற்றியோ குறிப்பிடாமலும் நகர்மன்ற தலைவர் மீது எதிர்ப்புகள் காட்டும் விதமாக நகராட்சியில் நடைபெற்று வரும் பணிகள் அனைத்தையும் எவ்வித ஆதாரமுமின்றி விமர்சித்தும் முறைகேடு,ஊழல் என குறிப்பிட்டு புகார் அளித்துள்ளார். மேலும் நகர்மன்ற தலைவரின் உரையாடல் என குறிப்பிட்டும் புகார் அளித்துள்ளார். மேற்கண்டவைகளுக்கு நகர்மன்ற தலைவர் தனது அறிக்கை அளிக்க வேண்டும் என்பதால் அறிக்கை கோர கடிதம் எழுதப்பட்டுள்ளது. மேலும், அலுவலக தொடர்பான சில விளக்கங்களை கீழ்கண்டவாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

2022ம்ஆண்டு வரி சீராய்வு நடைபெற்றபோது ஆணையில் தெரிவித்துள்ளபடி உரிய முறையில் வரி சீராய்வு நடைபெற்றபோது அரசாணையில் தெரிவித்துள்ளபடி உரிய முறையில் வரி சீராய்வு செய்யப்பட்டு நகராட்சியின் வருவாய் உயர்வு செய்யப்பட்டுள்ளது. பள்ளபட்டி பேரூராட்சியாக இருந்தபோது உள்ள சொத்துவரி கேட்பை விட நகராட்சியின் சொத்துவரி கேட்பு உயர்வு செய்யப்பட்டு பொதுமக்களிடம் 2023–24 கேட்புக்கு 94% வசூல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறின்றி புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

நகராட்சியில் பெருவாரியான இடங்கள் வக்போர்டு வாரியத்திற்கு சொந்தமானதாக உள்ளது. மேலும் நகராட்சி ஆன பின்பு மனைபிரிவு அங்கீகாரம் ஏதும் வழங்கப்படவில்லை.

நகராட்சியில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் உரிய கண்காணிப்பு அலுவலர்களிடம் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே அதற்குண்டான பட்டியல் தொகை வழங்கப்படுகிறது.

27.06.2024–ல் நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்திற்கு போதுமான நகர்மன்ற உறுப்பினர்கள் அதாவது 3–ல் ஒரு பங்கு வருகை தந்ததனால் கூட்டம் நடைபெற்றது. குறைவான நகர்மன்ற உறுப்பினர்களை வைத்து நகர்மன்ற கூட்டம் நடைபெறவில்லை என்பதனை தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு.சு.சேக்பரீத் அவர்களையும் மற்றும் எதிர்மனுதாரரான பள்ளபட்டி நகராட்சி ஆணையர் ஆகியோரை 20.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 09.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.சு.சேக்பரீத் 20.09.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

பள்ளபட்டி நகராட்சி 20–வது வார்டு பெண் கவுன்சிலர் திருமதி.முனவர்ஜான் நகராட்சி தலைவர் பொறுப்பில் உள்ளார். சிலமாதங்கள் அவர் நடுநிலையாக செயல்படுவது போல தோற்றம் அளித்தாலும் அவரது மகன் அதிகாரமில்லாத ஆதிக்கத்தில்தான் நகராட்சி செயல்படுகிறது. இதனால் முறைகேடுகள்,இலஞ்சம், ஊழல்கள், பாரபட்சம் காட்டல், அதிகார துஷ்பிரயோகம் செய்தல், இலஞ்சம் வாங்கும் நகராட்சி அதிகாரிகளை ஊக்குவித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.நகராட்சியில் பொதுமக்கள் தங்களுடைய அடிப்படை பணிகளை நேர்மையாக செய்யப்படமுடிவதில்லை. நகராட்சி ஆணையர், நகராட்சி தலைவர், நகராட்சி செயற்பொறியாளர் இன்னும் சில அலுவலர்கள் கூட்டமைத்து, வரி சீராய்வு என்ற பெயரில் சொத்துவரி உயர்வில் கொசுமருந்து தெளிப்பவர்கள், தினக்கூலி துப்புரவு செய்பவர்கள் மூலம் சட்டவிரோதமாக தவறான அளவீடு செய்யப்பட்டு குளறுபடிகள் நடந்துள்ளது. பல்வேறு சாலைகள், தெருக்கள், அரசுக்கு சொந்தமான இடங்களை சிலர் ஆக்கிரமிப்பு செய்வதை நகராட்சி ஊக்குவித்து பல்லாயிரக்கணக்கில் முறைகேடாக வசூல் செய்கிறது. பொதுபணி செய்ய இடமில்லாமல் தவிக்கும் அவலநிலை. பிளான் அப்ரூவல், அடிப்படை வசதிகள், பணிகளில் தரமற்ற சாலை, வடிகால் சாக்கடை அமைத்தல், ஆக்கிரமிப்பை ஊக்குவித்தல், பொதுநிதியை முறைகேடாக சுரண்டல், பொய்கணக்கு பில் செய்தல், செய்யப்படாத பணிகளுக்கும் கொள்முதல் முறைகேடு, மின்விளக்கு முறைகேடு, பிளீச்சிங் பவுடர் சுகாதார பொருட்கள் கொள்முதல் முறைகேடு, அதிகார துஷ்பிரயோகம்,

சேர்மன் மகள் மூலம் பல இடைத்தரகர்கள் உருவாகி இலஞ்சம்பெற்று பணி செய்வது. பொதுமக்களை அலட்சியம் செய்வது, அடிப்படை வசதிகளான சாலை, சாக்கடை வடிகால் பணி செய்யப்படும்பொழுது ஒப்பந்ததாரர் பெயர், விலாசம், ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீடு போன்றவை மக்கள் பார்வைக்கு வைக்கப்படுவதில்லை. மேலும் பள்ளபட்டி நகராட்சியில் முறையாக கள ஆய்வு செய்தும், ஓடை, குளம், கிணறு, பொது இடங்கள், சாலைகள், தெருக்கள் ஆக்கிரமிப்பை மீட்டு அதனை முழுமையாக அகற்றி பொது பயன்பாட்டு சேவை செய்யும் இலஞ்சமில்லா பணிகளை மக்கள் நலன் கருதி செய்து தரவும், முறைகேடாக நடைபெற்று வரும் நகராட்சி ஆணையாளர், நகர்மன்ற தலைவர், நகராட்சி மண்டல இயக்குநர், நகராட்சி செயற்பொறியாளர், அலுவலக உதவியாளர் போன்றோர் மீது நீதி விசாரணை மேற்கொண்டு இவர்களை துறைரீதியாக சட்ட நடவடிக்கை உட்படுத்தி உரிய தண்டனை பெற்றுத்தருமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 29.07.2024 நாளைய கடிதத்தில் தெரிவித்துள்ள விபரங்களையும் மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இன்று 20.09.2024 நேரடி விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்ட எனது கோரிக்கைகளை பதிவு செய்கிறேன்.

- குப்பைகளை கொண்டு மூன்று கிணறுகளை(வத்தப்பா கிணறு, மண்மாரி கிணறுகள்) மூடி சுகாதார கேடு மற்றும் வாழ்வாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

- 11–வது வார்டு பகுதியில் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை சரி செய்யவில்லை. அடிப்படை வசதிகளான, சாக்கடைகள் பராமரிப்பு மற்றும் குப்பை அள்ளுதல் போன்ற சுகாதார பணிகள் நடைபெறவில்லை.

- 27.06.2024 அன்று தீர்மானங்கள் தன்னிச்சையாக மாமன்ற உறுப்பினர்கள் ஒப்புதலின்றி நிறைவேற்றப்பட்டுள்ளன. கோரமில்லாத கூட்டம் நடைபெறுகிறது.
  Minutes புத்தக நகல் வழங்கப்படவில்லை.

- பேருந்து நிலைய வளாகங்கள் மற்றும் பேருந்து நிலையத்திலிருந்து மின்வாரிய அலுவலகம் வரை உள்ள சாலை இரண்டுபுறமும் (கிழமேல் மற்றும் தென்வடல்) தனிநபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இதை நகராட்சி கண்டுகொள்ளவில்லை. பேருந்து நிலையத்திலிருந்து உரூஸ்கடை தர்கா முனை வரை ஆக்கிரமிப்பு மற்றும் உரூஸ்நடுநிலைப்பள்ளி சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள், பழைய சாமான்கள் கடையினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ஜி.மார்ட், சிக்கன் பார்க், சுல்தார் மஹால் இதுபோன்ற கட்டிடங்கள் சட்டவிரோதமாக விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ளது. அதற்கு நகராட்சி நிர்வாக அனுமதியும் அளித்துள்ளது. இதுபோன்ற பல கட்டிடங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் விதிமுறை மீறி கட்டப்பட்டு நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- முன்னாள் எம்.எல்.ஏ.அப்துல் ஜப்பார் அவர்களின் மகன் வாரிசான பரிதாபானு வீடு பெயர் மாற்றத்திற்காக நகராட்சியனரால் லட்சக்கணக்கில் இலஞ்சம் கேட்டு, அதை கொடுக்க இயலாததால், ஒரு வருடம் கழித்து பெயர் மாற்றம் செய்து தரப்பட்டது.

- நகராட்சியால் வீட்டு வரி ரசீது, மற்றும் பெயர்மாற்றம், மற்றும் புதிய வரிகளுக்கான தேவையான ஆவணங்களை நகராட்சி அலுவலகத்தில் பெயர்பலகையில் வைக்கப்பட வேண்டும்.

- குப்பை கிடங்கு பராமரிப்பில்லாமல் அருகில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ மாணவியருக்கும் பகுதி மக்களுக்கும் தொற்று நோய் உருவாக்கும் விதமாக குப்பைகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

- அலுவலக உதவியாளர் திரு.க.ரவி அவருடைய பள்ளி மாற்று சான்றிதழை தணிக்கை செய்யவும், அமராவதி ஆற்றுபடுகை இரவு நேர காவலர் திரு.சாகுல் ஹமீது (Tank Operator) மற்றும் ரத்தினம் இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பணியினை விட்டு விட்டு மாற்றுப்பணி செய்து வருகின்றனர்.

- நகராட்சி ஆணையரின் ஒப்புதலோடு நகர்மன்ற தலைவி மகன் தலையீட்டில் பல புரோக்கர்களையும் அலுவலர்களையும் வைத்து முறைகேடு நடைபெற்று வருகிறது.
- லஞ்ச ஊழலை ஊக்குவிக்கும் விதமாக நகராட்சி தலைவி முனவர் ஜான் பேசிய முழு ஆடியோவும் தொடர்புள்ள அலுவலர்களையும் தெரிவித்துள்ளார்.

- நகராட்சியால் கொள்முதல் பொருட்களில் ஊழல் நடைபெற்று வருகிறது.

- 27 வார்டுகளை கொண்ட நகராட்சிக்கு ஒரே ஒரு பிளம்பரை வைத்து பணிகள் நடைபெற்று வரப்படுகிறது. விதிமுறை மீறி குடிநீர் இணைப்புக்கு பணம் பெறப்படுகிறது. பராமரிப்பு பணிக்கும் அதிகஅளவு பொதுமக்களிடம் பொருட்களோடு பணம் பெறுகின்றனர்.

- நகர் மன்ற தலைவி ஊழலை ஆதரித்து பேசிய ஆடியோவினை பென் டிரைவில் சமர்ப்பித்துள்ளேன். வரி சீராய்வு இதுவரை முறைப்படுத்தவில்லை.

- பொதுமக்கள் புகார் மனுக்களுக்கு சம்பந்தப்பட்ட நகராட்சி துறை ஒப்புதல் சீட்டு வழங்குவதில்லை.

- தனக்கு தேவையான தரமற்ற ஒப்பந்ததாரர்களை வைத்து, தரமில்லாத அடிப்படை பணிகளான சாலை, சாக்கடை பணி செய்வதை தடுத்து தரமான பணி செய்து, பூங்கா இடங்களையும், நகராட்சி இடங்களையும் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டுத்தர கோரியுள்ளார்.

6) பள்ளபட்டி நகராட்சி ஆணையாளர் 20.09.2024 அன்று நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

பள்ளபட்டி நகராட்சியில் 27 நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தற்போது வார்டு எண்.20 நகர்மன்ற உறுப்பினர் திருமதி.முனவர்ஜான் முறைப்படி நகர்மன்ற தலைவராக பொறுப்பில் இருந்து வருகிறார். பள்ளபட்டி நகராட்சி பற்றி மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட புகார்கள் அனைத்தும் ஒரு பணியினை பற்றியோ அல்லது குறிப்பிட்ட காலத்தினை பற்றியோ குறிப்பிடாமலும் நகர்மன்ற தலைவர் மீது எதிர்ப்புகள் காட்டும் விதமான நகராட்சியில் நடைபெற்று வரும் பணிகள் அனைத்தையும் எவ்வித ஆதாரமும் இன்றி விமர்சித்தும், முறைகேடு, ஊழல் என குறிப்பிட்டு புகார் அளித்துள்ளார். மேலும் நகர் மன்ற தலைவரின் உரையாடல் என குறிப்பிட்டும் புகார் அளித்துள்ளார். மேற்கண்டவைகளுக்கு நகர்மன்ற தலைவரிடம் இதுதொடர்பாக விளக்கம் கோரப்பட்டது. அலுவலக தொடர்பான சில விளக்கங்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

2022–ஆம் ஆண்டு வரி சீராய்வு நடைபெற்ற போது ஆணையில் தெரிவித்துள்ளபடி உரிய முறையில் வரி சீராய்வு நடைபெற்றபோது அரசாணையில் தெரிவித்துள்ளபடி உரிய முறையில் வரி சீராய்வு செய்யப்பட்டு நகராட்சியின் வருவாய் உயர்வு செய்யப்பட்டுள்ளது. பள்ளபட்டி பேரூராட்சியாக இருந்தபோது உள்ள சொத்துவரி கேட்பை விட நகராட்சியின் சொத்துவரி கேட்பு உயர்வு செய்யப்பட்டு பொது மக்களிடம் 2023–24 கேட்புக்கு 94% வசூல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறின்றி புகார் மனுவில் குறிப்பிடடுள்ளவாறான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

நகராட்சியில் பெருவாரியான இடங்கள் வக்போர்டு வாரியத்திற்கு சொந்தமானதாக உள்ளது. மேலும் நகராட்சி ஆன பின்பு மனைபிரிவு அங்கீகாரம் ஏதும் வழங்கப்படவில்லை.

நகராட்சியில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் உரிய கண்காணிப்பு அலுவலர்களிடம் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே அதற்குண்டான பட்டியல்தொகை வழங்கப்படுகிறது.

27.06.2024–ல் நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்திற்கு போதுமான நகர்மன்ற உறுப்பினர்கள் அதாவது 3–ல் 1 பங்கு வருகை தந்ததனால் கூட்டம் நடைபெற்றது. குறைவான நகர்மன்ற உறுப்பினர்களை வைத்து நகர்மன்ற கூட்டம் நடைபெறவில்லை என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட விவரங்கள் அனைத்தையும் இம்முறைமன்ற நடுவத்தின் முன் பதிவு செய்கிறேன். மேலும் 23.08.2024 நாளிட்ட எனது அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படியும், நகர்மன்ற தலைவரின் 28.08.2024 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரங்களையும் இம்முறைமன்றத்தில் கடிதம் வாயிலாக சமர்ப்பித்துள்ளேன் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

- நான் பள்ளபட்டி நகராட்சியில் 02.08.2023 அன்று முதல் நகராட்சி ஆணையாளராக பணி புரிந்து வருகிறேன்.மனுதாரர் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் சமர்ப்பிக்கிறேன்.
- வார்டு எண்.11–ல் NSMT திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட தார்சாலை மறுசீரமைப்பு பணியினை நகர்மன்ற உறுப்பினர் மேற்கொள்ள வேண்டாம் என

கேட்டுக்கொண்டதனடிப்படையில் நகர் மன்ற அனுமதி பெற்று இத்திட்டம் கைவிடப்பட்டது. மேலும் வடிகால் வசதி பற்றி தனியாக அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

- 27.06.2024 அன்று நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் நகர்மன்ற தலைவர் உட்பட ஒன்பது உறுப்பினர்கள் கலந்துகொண்டதனால் உரிய கோரத்தில் கூட்டம் நடைபெற்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

- பேருந்து நிலையத்தில் நிழற்குடை ஏதுமில்லை. கடைகளுக்கு முன்பு கடைக்காரர்கள் நிழலுக்காக போடப்பட்டுள்ள சன்சேட் ஆக்கிரமிப்புகளை முறையாக அகற்றப்படும்.

- பள்ளபட்டியில் உள்ள மூன்று பூங்காக்கள் அடிக்கல் நாட்டப்பட்ட பின்னரும் ஒப்பந்ததாரர் பல மாதங்களாகியும் பணியினை மேற்கொள்ளாததால், 05.08.2022 அன்று ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. 30.08.2022–ல் நகர்மன்ற கூட்டத்தில் மேற்கண்ட ஒப்பந்த ரத்து விசயம் பதியப்பட்டு புதியதாக சக்தி நகர் பார்க் பூங்காவினை புணரமைப்பு பணிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. மேற்கண்ட பூங்காவிற்கு அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.23 இலட்சத்தில் அனுமதிக்கப்பட்டு பூங்கா பணி முடிக்கப்பட்டுள்ளது. பூங்காவின் திறப்பு விழாவிற்கு முன்னர் சமூக விரோதிகளால் பூங்காவிற்கு சேதம் ஏற்படுத்தப்பட்டு தடுப்பு சுவர்,கேட், கதவு உடைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக காவல்துறையினருக்கு புகார் மனு அளிக்கப்பட்டு தற்போது மீண்டும் சீரமைப்பு பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- சொத்து பெயர்மாற்றம் தொடர்பான விண்ணப்பங்களுக்கு 30 நாட்களுக்குள் முடிவுகள் மேற்கொள்ளப்படும். மனுதாரர் குறிப்பிட்டுள்ள விண்ணப்பம் பற்றி ஆய்வு செய்து உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

- 01.04.2022 முதல் அரசு ஆணையின் பிரகாரம் ஏற்கனவே வரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஏதும் முறைகேடுகள் ஏதும் இல்லை. நகராட்சியினுடைய ஒவ்வொரு செலவினமும் உரிய நகர்மன்ற அனுமதி பெறப்பட்டு மேற்கொள்ளப்படுகிறது.

- மனுதாரர் தெரிவித்துள்ளபடி நகர்ப்புற பகுதிகளில் குப்பைகள் ஏதும் சேகரித்து வைக்கப்படவில்லை.

- திரு.ரவி, அலுவலக உதவியாளர் பணியில் சேர்ந்து 25 ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் அவரது கோப்பு ஆய்வு செய்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும். திரு.சாகுல் ஹமீது, குடிநீர் காவலர் என்பவர் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நிர்வாக ஏற்பாட்டின்படி அலுவலகத்தில் வரி வசூல் மையத்தில் பணிபுரிய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

- திரு.சங்கம்பிள்ளை, இளநிலை உதவியாளர் என்பவர் இந்நகராட்சியில் பதிவுரு எழுத்தராக பணிபுரிந்து வந்த நிலையில் தகுதிக்கேற்ப பதவி உயர்வு வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநரக உத்தரவின்படி போதிய கல்வி தகுதிபெற்ற

இவரை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் இந்நகராட்சியில் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

- மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு பள்ளபட்டி நகராட்சியில் புரோக்கர்கள் யாருமில்லை என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
- பள்ளபட்டி நகராட்சியில் குடிநீர் குழாய் பணிகளுக்கு அரசு விதிகளின்படி முறையாக ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் சரிவர நடைபெற்று வருகின்றன.
- நன்காஞ்சி ஆறு பொதுப்பணித்துறையினருக்கு சொந்தமானது. பள்ளபட்டி முழுவதும் செல்கிறது. அநேக இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவது பல நிகழ்வுகளில் பிடித்து தண்டக்கட்டணம் செலுத்தி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
- மனுதாரர் குறிப்பிட்டுள்ள சின்டெக்ஸ் டேங்க் அமைக்கப்பட்டுள்ள இடம் வேறு ஒருவருக்கு சொந்தமானது என புகார் அளித்துள்ளதனால் இது தொடர்பாக ஆவணங்களை சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

7) மீண்டும் மனுதாரரையும், பள்ளபட்டி நகர்மன்ற தலைவர் திருமதி.முனவர்ஜான் அவர்களையும் 09.10.2024 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 24.09.2024 நாளிட்ட அறிவிப்பு கடிதம் மூலம் அழைக்கப்பட்டனர்.

8) மனுதாரர் 09.10.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

பள்ளபட்டி நகராட்சி மாமன்ற உறுப்பினர் திரு.முனவர்ஜான் அவர்கள் பள்ளபட்டி நகராட்சி அலுவலர்கள் வாங்கும் லஞ்சத்தை ஆதரித்தும், அதற்கு நகராட்சி மண்டல இயக்குநர் அவர்களுக்கு பிரதிமாதம் ரூ.20,000/– நகராட்சி பற்றிய செயல்பாடுகளை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காக கொடுக்க வேண்டியதாக இருப்பதாகவும் நகராட்சி அலுவலர்களின் செலவினங்களுக்காகவும் வாங்குவதாக உறுதி அளித்துள்ளார். இது மக்கள் பிரதிநிதியாக இருந்து ஊழல்முறைகேடு செய்து பொதுமக்கள் நம்பிக்கையையும், உழைப்பையும் சுரண்டும் நிலையாகும். சம்மந்தப்பட்ட இவர்கள் மீது துறைரீதியாக கடும் நடவடிக்கை கோருகிறேன்.

பள்ளபட்டி நகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் 20 பேருடைய உரிமைகள் அதிகாரங்கள் அனைத்தும் நகராட்சி தலைவியால் பறிக்கப்படுகின்றன. உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. இதனால் நகராட்சி ஆணையாளரிடம் ராஜினாமா கடிதம் கொடுக்கப்பட்டும், ஊடகம் வாயிலாக செய்தியாக வெளிவந்தது.

முறைப்படுத்தப்படாத சொத்துவரி சம்மந்தமான வரிஏய்ப்பு விதிமுறைகள் இன்றும் நடைமுறையில் உள்ளது. தனக்கு வேண்டப்பட்டவர்கள், செல்வந்தர்கள், அரசியல்வாதிகளின் சொத்துக்களுக்கு குறைவான வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனை ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

தரமற்ற ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு தரமற்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. என்ன பணி செய்கிறோம் என்ற பெயர்பலகை கூட வைப்பதில்லை. என்ன பணி செய்கிறார்கள் என்று பொதுமக்களுக்கு தெரிவதும் இல்லை.

இஸ்லாமிய உள்ளூர் திருவிழாவில் இந்த முறை நகராட்சி நிர்வாகம் வரிவசூல் செய்தது. 10 x 10 = 100 சதுர அடிக்கு நாள் ஒன்றுக்கு ரூ.375/– வீதம் 10 நாட்களுக்கு ரூ.3750/–ம்

அத்தோடு திடக்கழிவு மேலாண்மை 100 சதுர அடிக்கு ரூ.1000/– வீதம் ஒவ்வொரு சாலைக்கடைகளுக்கும் ரூ.4750/– வசூல் செய்யப்பட்டுள்ளது. அதற்கான ஆதார நகலை அளித்திருக்கிறேன். ஒன்றரை லட்சம் சதுர அடி கொண்ட பகுதியில் பல லட்சங்கள் வசூல் செய்யப்பட்டுள்ளது. இதன் முறையான கணக்கினை மக்கள் மன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். இதில் பெரும் முறைகேடு நடந்து உள்ளது.

நகராட்சிக்கு சொந்தமான கொள்முதல் பொருட்கள், தளவாடங்கள், பிளீச்சிங் பவுடர், மின்விளக்குகள் வாங்குவதில் லட்சக்கணக்கில் முறைகேடு நடைபெற்றுள்ளது.

பள்ளபட்டி நகராட்சி 20000 குடும்பம் உள்ள பகுதியில் நகராட்சி சார்பில் நகராட்சி தலைவருடைய ஆதரவில் ஒரு பிளம்பரை வைத்து அனைத்து வகையான பணிகளும் செய்யப்படுகிறது. மாமன்ற தீர்மானத்தில் இரண்டு பிளம்பர்கள் இடம் பெற்றுள்ளனர். ஒரு பிளம்பரை வைத்து முறைகேடான வழியில் பணிகள் செய்யப்படுகின்றன. புதிய இணைப்புக்கு ரூ.17500/–ம், சாலை பழுதுபார்க்கும் செலவு ரூ.5000/–ம் இதில் அடங்கும். ஆனால் இதற்கு மேலாக வாடிக்கையாளருக்கு புதிய இணைப்பு கொடுக்கும்போது அதிகமாக ரூ.5000/– மறுபடியும் பெறுவதோடு இணைப்புக்கான அனைத்து பைப் வகை பொருட்களையும் நுகர்வோரிடம் பெற்றுத் தரப்படுகிறது.

27.06.2024 மாமன்ற உறுப்பினர்கள் 20 பேர் அன்றைய கூட்டத்தை புறக்கணித்தனர். கோரமில்லா கூட்டம் நடைபெற்றது. முறைகேடாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக சம்மந்தப்பட்டதுறை தலைமைக்கும், துறை அமைச்சருக்கும் மனு கொடுக்கப்பட்டுள்ளது.

20 வார்டு உறுப்பினர்கள் நகராட்சி தலைவியின் தன்னிச்சையான செயல்பாடுகளால் சம்மந்தப்பட்ட நகராட்சி ஆணையரிடம் ராஜினாமா கடிதம் கொடுத்துள்ளனர். இதற்கான ஊடகத்தில் வெளியான வீடியோ ஆதாரமும் இணைக்கப்பட்டுள்ளது.

நகராட்சி பொதுநிதி, துறைநிதி, சட்டமன்றம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நிதியினை நகராட்சி தலைவி தனக்கு சாதகமான பகுதிக்கும், செல்வந்தர்கள் அதிகம் வாழும் பகுதிகளுக்கு மட்டுமே சட்ட விரோதமாக பயன்படுத்தி வருகிறார். இதற்கு நகராட்சி பொறியாளர், ஆணையாளர் உடந்தை.

வார்டு எண்.11 ஏழை, எளிய மக்கள் வாழும் பகுதியானது. இப்பகுதிக்கு அடிப்படை வசதிகளான சாலை மற்றும் சாக்கடை வசதி, மற்றும் ஏனைய வசதிகள் நகராட்சி மன்ற தலைவியின் காழ்ப்புணர்சசியால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. எனவே நீதி விசாரணை செய்து போர்க்கால அடிப்படையில் பணிகளை செய்ய வேண்டும்.

பள்ளபட்டி நகராட்சி அந்தஸ்து பெற்று மூன்று வருடங்கள் ஆகியும் இதுவரையிலும் எந்தவித முன்னேற்ற வசதிகள் விளையாட்டு மைதானமோ நடைமேடையோ இன்னும் பல அடிப்படை வசதிகள், வளர்ச்சிப்பணிகள் ஏதும் நடைபெறவில்லை. மாறாக பொதுமக்களை விரட்டி பல்வேறு வரியினங்கள் வசூலிக்கப்படுகிறது.

வருவாய்த்துறை கட்டுப்பாட்டில் உள்ள வார்டு எண்.2 சந்தைப்பேட்டை தெருவில் ஆடு அடைக்கும்பட்டியை நகராட்சி மன்ற தலைவியின் முழு தலையீட்டால் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக மக்களுடைய நகராட்சி பொதுநிதியில் கம்பி வேலி அமைக்க ரூ.1,20,000/– தேவையற்ற செலவு செய்யப்பட்டுள்ளது. வருவாய்துறையிடமிருந்து நகராட்சி நிர்வாகத்திற்கு இந்த நிதி வரப்பட வில்லை.

விதிமுறைகளை மீறி வணிகவளாக கட்டிடங்கள், மருத்துவமனைகள் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அரபா சிக்கன் பார்க், ஜி மார்ட், சுல்தார் ஹபிபுல்லா மஹால், டிஎன் 33 பேக்கரி, பாவா கிளாஸ், மலர் மற்றும் பள்ளபட்டி சூப்பர் மார்க்கெட், நாதன் மருத்துவமனை சாலையிலிருந்து அடித்தளத்தில் அமைந்துள்ளது.

நகராட்சி தலைவியின் வழிகாட்டுதலால் அதிகாரதுஷ்பிரயோகம் செய்து அவரது மகன் சலீம் என்பவரினால் பிளான் அப்ரூவல் மற்றும் பொதுமக்களுடைய அடிப்படை பணிகளுக்கு ஆயிரக்கணக்கில் பேரம் பேசப்படுகிறது. பணத்திற்காக நகராட்சியில் வரியினங்களை பெயர்மாற்றம் செய்ய தேவையற்ற அதிகளவு ஆவணங்களை கூறி காலம் கடத்துகின்றனர். இதனை தகவல் பலகையில் ஆவணங்கள் நகராட்சி சம்பந்தமான பணிகளுக்கான ஆவணங்களை பட்டியலிட வேண்டும்.

நகராட்சி தலைவி வருமானம் ஈட்ட கூடிய வகையில் பேருந்து நிலையம் ஆக்கிரமிப்பான தனியார் வாகனங்கள் நான்கு சக்கரம் மற்றும் மூன்று சக்கர வாகனங்களை முற்றிலுமாக அகற்றி நகராட்சி நிர்வாகத்திற்கு வருமானம் ஈட்டக்கூடிய வகையில் வணிக வளாகக்கட்டிடங்கள் அமைக்க வலியுறுத்தப்படுகிறது. மேலும் பஸ்நிலையத்திலிருந்து தென்பகுதி, செங்கல்வராயன்பேட்டை, முதல் பாப்புலர் மெடிக்கல்ஸ் வழியாக காயிதே மில்லத் பூங்கா வரை ஆக்கிரமிப்பும், கிழக்கு பள்ளிவாசல் சாலை, ஹபீப் ஷாதி மஹால் வரையில் அகற்றவும் பொதுமக்கள் சார்பில் கோரப்படுகிறது.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005–ன் கீழ் நகராட்சி சம்மந்தமான தகவல்களை கோரப்பட்டு இதற்கு முழுமையான விளக்கம் கொடுக்காமல் சம்மந்தப்பட்ட துறையை அவமானம் செய்தனர். இன்னும் 100 மனு அளித்தாலும் பதில் தரமாட்டோம் என நகராட்சி தலைவி விளக்கம் அளித்தார். எனவே நகராட்சி ந.க. எண்.982/2023 (இ)1 நாள் 07.08.2023 திரு.சு.சேக் பரீத் என்பவரின் தகவல்களையும், மற்றும் ந.க.எண்.1092/2023 (அ) 1, நாள் 20.10.2023 திரு.சாதிக் அலி என்பவருடைய தகவல்களையும் பதில் அளிக்க வேண்டுமாய் கேட்கிறோம்.

அதே நேரத்தில் நகராட்சி மாமன்ற 11 வது வார்டு உறுப்பினர் திருமதி.சர்மிளாபானு ந.க.எண்.741/2022/சி1 நாள் 09.01.2023 மற்றும் 825/ந.நி3/2024 நாள் 08.02.2024, ந.க.எண்.2027/2024/மவி2 இவைகளுக்கான தீர்வு வழங்கப்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற பல கவுன்சிலர் பகுதியை புறக்கனித்துள்ளார். எனவே பாரபட்சமில்லாமல் பணி செய்ய கோரிக்கை வைக்கப்படுகிறது.

பள்ளபட்டி நகராட்சி அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி கணினி கட்டிடம் NNT மூலம் 13 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் நகராட்சி சார்பில் 13 லட்சமும், பொதுமக்கள் சார்பில் 6 லட்சமும் நிதி ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. ஏற்கனவே பேரூராட்சியாக இருந்த காலத்தில் அன்றைய செயல் அலுவவர் திரு.கணேசன் அவர்களால் இதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. மேலும் கல்விக்கட்டணம் மற்றும் அன்பளிப்புகள் பெறும் கிரசென்ட் மெட்ரிகுலேசன் பள்ளியின் மாற்று அதிகப்படியான கட்டிடத்தை அரசு உதவி பெறும் பள்ளபட்டி மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் கட்டப்பட்டு வருகிறது. இதனை மறைத்து சட்ட விரோதமாக செயல்படுகின்றனர். எனவே தனி ஆய்வு செய்து கட்டிட அனுமதி வழங்கப்படக்கூடாது என்றும் அதே நிலையில் அந்தக்கட்டிடத்தை பள்ளப்பட்டி அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிக்கு வழங்கவும் உத்தரவிட கோருகிறேன்.

தனிநபர்கள் மற்ற அரசியல்வாதிகள், செல்வந்தர்கள் ஆக்கிரமிப்பில் இருக்கும் குளம், குட்டைகள், புறம்போக்கு இடங்களை மீட்கவும், இவைகளோடு பூங்காவிற்கென ஒதுக்கப்பட்ட இடத்தை போர்க்கால அடிப்படையில் மீட்டுத்தரவும் கோருகிறேன்.

மேலும் பள்ளபட்டி நகராட்சி நிர்வாகத்தின் அலட்சியத்தால் பகுதி உறுப்பினர் மற்றும் பகுதி மக்கள் கோரிக்கைகளை பொதுமக்கள் நலன் கருதாது பாதுகாப்பற்ற கல்வெட்டை முக்கியமான மக்கள் செல்லும் பாதைக்கு போடப்படாததாலும் நேற்றைய தினம் (08.10.2024) அன்று மாலை பாதுகாப்பற்ற பெரிய கழிவு நீர் சாக்கடையில் 7–ம் வகுப்பு படிக்கும் 14 வயது சிறுவன் முஹம்மது உஸ்மான் உயிரிழந்தார். இதற்கு சம்மந்தமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் சம்மந்தப்பட்ட மாணவனின்குடும்பத்திற்கு அரசு நிதி வழங்க ஏற்பாடு செய்யுமாறு வேண்டுகிறேன்.

மேலும் பொதுமக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் கோரிக்கைகளுக்கான மனுக்களுக்கு கண்டிப்பாக சம்மந்தப்பட்ட நிர்வாகம் ஒப்புகை சீட்டு வழங்க வேண்டி கோருகிறேன்.

அலுவலக உதவியாளர் க.ரவி எனபவர் நகராட்சியில் அரசு ஊழியர் பணி செய்து கொண்டு மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் பெற்றுக்கொண்டு முறைகேடாக நகராட்சி தலைவியின் தூண்டுதலோடு பலபேருக்கு வேலை வாங்கித்தருவதாக பல லட்சம் மோசடி,போலி பள்ளி மாற்றுச்சான்றிதழ் தயாரித்தார். உண்மை வெளிவரவே VRS வாங்குகிறார்.

9) பள்ளபட்டி நகர்மன்ற தலைவர் திருமதி.முனவர்ஜான் 09.10.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

நான் நகர்மன்ற தலைவராக பணியேற்று உள்ளேன். சமூக ஆர்வலர் என்ற போர்வையில் சில சமூக விரோதிகள் என் மீது பொய்யான தகவல்களை பரப்பி எனக்கும், நான் சார்ந்து இருக்கக்கூடிய கட்சிக்கும் அவப்பெயர் ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். என் மீது புகார் அளித்துள்ள திரு.ஷேக் பரீத் அவர்கள் சமூக ஆர்வலர் என்ற போர்வையில் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் எதிரான வேலைகளைச் செய்து வரக்கூடியவராவார். அதற்கு ஆதாரமாக Explosive Sustances Act 1908 –கீழ் மதுரை கே.புதூர் காவல் நிலையத்தில் Crime No.83/2017 என்று முதல் தகவலறிக்கைபதிவு செய்யப்பட்டு வழக்கானது மதுரை Judicial Magistrate Court No.6-ல் வழக்கு எண்.cc No.29/2018 வெடிபொருட்கள் தயாரித்தல், கையாளுதல், அவற்றை நாட்டிற்கு எதிராக பயன்படுத்துதல் போன்ற காரணங்களுக்காக வழக்கானது பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. மேலும் இவர் பொய்யான காரணங்களை பரப்புவேன் என்றும் என்னிடமும் சக வார்டு உறுப்பினர்களிடம் மாமூல் கேட்டு மிரட்டுவதுடன், நகராட்சி மன்றக்கூட்டம் நடத்துவதற்கும் தடங்கல் ஏற்படுத்தி வருகிறார். இவரது உடன்பிறந்த சகோதரி திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவரைப் பயன்படுத்தி அலுவல் விசயங்களை கேட்டு அறிந்து கொள்வது மற்றும் நகர்மன்ற கூட்டத்தில் போடப்படும் தீர்மானங்கள் மற்றும் நகர்மன்ற அஜென்டாக்களை ரகசியமாக எடுத்துச் சென்று அவற்றை whatsapp மூலம் பதிவிட்டு பொது அமைதியை கெடுக்கும் நோக்கத்தில் செயல்படுவது அவரின் அன்றாட வாழ்க்கையில் செயல்பாடாகும். மேலும் சமூக விரோதிகளோடு கூட்டு சேர்ந்து கொண்டு தவறான பல செய்திகளை whatsapp–ல் பரப்பி விடுவதும், அவ்வாறு பரப்பக்கூடாது என்றால் மாமூல் கொடுக்கும்படி

என்னிடம் மாமூல் கேட்டு மிரட்டுவது, பணி செய்யவிடாமல் தடுப்பது போன்ற காரியங்களில் ஈடுபட்டு வருகிறார்.

- மனுதாரர் தெரிவித்துள்ள ஆடியோ உரையாடல் என்னுடையதல்ல என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.
- 2023ம் வருடம் இஸ்லாமிய திருவிழா நடைபெறும் சமயம் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டதால் ஏலம் விட இயலவில்லை. அதனால் நகராட்சியே எடுத்து நடத்தியது. வியாபாரிகளிடம் சரியான முறையில் வாடகை வசூல் செய்யப்பட்டது.
- பள்ளபட்டி நகராட்சியில் சாலைகள் அமைக்கும் பணி முடிவுற்றபின் முறையாக நகராட்சி பொறியாளர், இளநிலைபொறியாளர் ஆகியோரின் கள ஆய்வுக்குப்பின்னும் மூன்றாவது நபர் ஆய்வு செய்தபின்னர் தான் பட்டியல் தொகை தயாரிக்கப்பட்டு ஒப்பளிப்பு செய்யப்படும்.
- அதிகபட்சமாக வாய்மொழி புகார்கள் தான் வரப்பெறுகிறது. ஆகையினால் ஒப்புகை சீட்டு வழங்கப்படவில்லை.

- நகராட்சி அலுவலகத்தில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதால் சில பணிகளில் தாமதம் ஏற்படுவதுண்டு. எனினும் அவ்வாறான தாமதத்தை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- சொத்துவரி பொது சீராய்வு செய்யப்பட்டு சரியான முறையில் வரிவிதிப்பு நடைபெற்று வருகிறது.
- நகராட்சி அலுவலகத்தில் கணக்குகள் முறையாக பராமரிக்கப்பட்டு ஆணையாளரின் மேற்பார்வையில் கோப்புகள் சரியான முறையில் பாதுகாக்கப்படுகின்றன.
- பள்ளபட்டி நகராட்சி மாமன்ற தலைவரோடு சேர்த்து மொத்தம் 27 உறுப்பினர்களை கொண்டது. அவர்களின் பெரும்பான்மை ஆதரவோடுதான் ஒவ்வொரு நகர்மன்ற கூட்டமும் நடத்தப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.
- நகராட்சி டெண்டர்கள் முறையாக அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதன்படியே ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன. இதுநாள்வரையில் நானோ அல்லது எனது குடும்ப உறுப்பினர்களோ எந்தவிதமான டெண்டர்களையும், காண்ட்ராக்ட்களையும் எடுக்கவில்லை.
- பள்ளபட்டி நகராட்சியில் அரசு உதவி பெறும் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், கட்டிட வேலை நடைபெற்று வருகிறது. மேற்படி பள்ளி Pallapatti Education Society மூலம் நடைபெற்று வருகிறது. பள்ளி நிர்வாகத்திற்கு உரிய இடத்தில் முறையாக கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.
- 08.10.2024 அன்று மழைநீர் வடிகாலில் பள்ளிச்சிறுவன் தவறுதலாக விழுந்து அடித்துச்செல்லப்பட்டு காலமாகிவிட்டார். இந்த வடிகால் நெடுஞ்சாலைத்துறையைச் சார்ந்தது.

- பள்ளபட்டி பேருந்து நிலையத்தில் நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் ஏதும் நிறுத்தப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

10) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், பள்ளபட்டி நகராட்சி ஆணையரின் அறிக்கை, அவரது வாக்குமூலம் மற்றும் நகர்மன்ற தலைவரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

மனுதாரர் பள்ளபட்டி நகராட்சி ஆணையர் மீது பல குற்றச்சாட்டுக்களை தனது புகார் மனுவில் பக்கம்–01 முதல் பக்கம்–04 வரை தெரிவித்துள்ளார். மேலும் நகர்மன்ற தலைவி மீது குற்றச்சாட்டுக்களை கூறி அதற்கு ஆதாரமாக pen drive audio (உருளை நினைவகம்) உரையாடல் ஆதாரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்பித்துள்ளார். நகர்மன்ற தலைவி மேற்படி உரையாடல் தன்னுடையதல்ல என்று தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். பள்ளபட்டி நகராட்சி தலைவி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு முகாந்திரமாக மனுதாரர் pen drive audio (உருளை நினைவகம்) சமர்ப்பித்திருக்கின்ற நிலையில், அதனது உண்மைத்தன்மையினை ஆராய்ந்து, உண்மை இருக்கும் பட்சத்தில், குற்றவியல் நடவடிக்கையினை தொடர நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் மனுதாரரின் மற்ற புகார்கள் அனைத்தும் பள்ளபட்டி நகராட்சி அலுவலக நடைமுறைகளுக்கு தொடர்பாக இருப்பதால், மேற்கண்ட குற்றச்சாட்டுக்களின் உண்மைதன்மை அறியும் பொருட்டு ஒரு உயர்மட்டக்குழு அமைத்து, பள்ளபட்டி நகராட்சி அலுவலகத்தை ஆய்வு செய்து, குற்றச்சாட்டுக்களில் உண்மையிருக்கும்பட்சத்தில், அதனடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

2025–ஆம் ஆண்டு, மே திங்கள் 15–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.சு.சேக்பரீத்,
த/பெ. சுல்தான்,
128, பட்டானித்தெரு,
வார்டு எண்.11, பள்ளபட்டி நகராட்சி,
பள்ளபட்டி – 639 205.
கரூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையாளர்,
பள்ளபட்டி நகராட்சி,
பள்ளபட்டி.
கரூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,

எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – **600 028.**

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – **600 028.**

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்